DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, DINDIGUL

| | | |
|---|---|---|
| Case No. | : | CC 73 / 2018 |
| Deposition of witness for | : | PW : 1<br>DW : |
| Name | : | தர்மராஜ் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.06.2022

முதல் விசாரணை

நான் தற்போது திண்டுக்கல் நகர் வடக்கு காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். அயல் பணியாக ஆண்டி ரவுடி டீம்மில் பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு திண்டுக்கல் தாலுகா காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது, 30.03.2017 ம் தேதி திண்டுக்கல் வக்கம்பட்டி ஏரியாவில் என்னை பீட் ஆபீராக நியமித்திருந்தார்கள். நானும், பெடானியல் உள்ள சிராஸ்தீன் என்பவரும் அங்கு பணியில் இருந்தோம். அப்போது பித்தளைபட்டி பிரிவில் உள்ள ஒயின்சாப்பில் வேலை செய்யும் டாஸ்மார்க் ஊழியர்களுக்கு பாதுகாப்பு கொடுத்துவிட்டு, அவர்களை பேருந்தில் ஏற்றிவிட்டுவிட்டு, பித்தளைப்பட்டி பிரிவில் நின்றுகொண்டிருந்தோம். அப்போது டி.என்.57-AV-7774 பிளசர் வாகனத்தில் 3 நபர்கள் எங்களை தாண்டி சென்றார்கள் நாங்கள் அவர்களை சந்தேகப்பட்டு விரட்டிச்சென்றோம். பித்தளைப்பட்டியிலிருந்து ராயல்பட்டி செல்லும் வழியில் அவர்களை மடக்கிபிடித்துவிட்டோம். அவர்களிடம் அவர்களைபற்றிய விபரம் கேட்டபோது அவர்கள் மூவரும் தாங்கள் வைத்திருந்த வாளை எடுத்து என்னுடன் வந்த சிராஸ்தின் என்பவரை முதலில் வெட்டினார்கள். வெட்டும்போது நான் தடுத்தேன் அதில் எனது இடது முழங்கையில் வெட்டுகாயம் ஏற்பட்டது. மேலும் அந்த மூன்று நபர்களும் என்னையும் வெட்டினார்கள் நான் தடுத்தபோது தடுமாறி கீழே விழுந்துவிட்டேன். எனது இடதுகாலில்

V PRIYA
Digitally signed by V PRIYA
Date: 2022.07.05 10:04:32 +0530

வெட்டிவிட்டார்கள். வலது உள்ளங்கையிலும் வெட்டிவிட்டார்கள். அதன்பின்பு மேற்படி 3 நபர்களும் தப்பி ஓடிவிட்டார்கள். அதன்பின் நான் என்னுடன் இருந்த சிராஸ்சுதினுடன் காவல்நிலையத்திற்கும், எஸ்.பி.ஆபீஸ்க்கும் தகவல் சொல்லிவிட்டு திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன். அதன்பின்பு மேற்படி சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எங்களை தாக்கிய நபர்களில் இரண்டு நபர்கள் தற்போது நீதிமன்றத்தில் உள்ளார்கள். ஒரு நபர் இறந்துவிட்டார். புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>2 வது எதிரி தரப்பு குவி</u>

நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் எதிரிகளின் பெயர்களை குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். அதன் அடிப்படையில்தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ள விபரங்களைத்தான் எனது புகார் வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் காவல்நிலையத்தில் குற்றவாளிகள் அடையாள அணிவகுப்பு நடத்தப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் புலன்விசாரணை அதிகாரி எதிரிகளை இவர்கள்தான என்று கூறியபோதுதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் சொன்னமாதிரி எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. எனது உயரதிகாரிகள் கேட்டுக்கொண்டதன்பேரில் நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

V PRIYA
Digitally signed by V PRIYA
Date: 2022.07.05 10:04:41 +0530

Judicial Magistrate No.I
Dindigul.